செ.வெ.எண்.9. நாள். 5.11.2020.

# பத்திரிகை செய்தி

தபால் துறை மூலம் ஓய்வூதியதாரர் வீடு தேடி "டிஜிட்டல் வாழ்வுரிமை சான்று" வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் நவம்பர் மாதம் ஓய்வூதியதாரர்கள் அரசு அலுவலகங்களுக்கு நேரில் சென்று தங்களின் இருப்பை டிஜிட்டல் வாழ்வுரிமை சான்று மூலமாக பதிவு செய்ய வேண்டும். கொரோனா பரவல் காரணமாக வயதானோர் பலர் உயிருடன் இருந்தும், வாழ்வுரிமை சான்று சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் ஓய்வூதியம் பெற இயலாமல் போகிறது.

இதை தவிர்க்க மத்திய அரசின் ஜீவன் பிரமான் திட்டத்தில் முதல் முறையாக தபால் துறையின் இந்தியா போஸ்டல் பேமேன்ட் பேங்க் மூலமாக வீடு தேடி சென்று ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் வாழ்வுரிமை சான்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் தங்கள் பகுதி தபால்காரரிடம் ஆதார் எண், தொலைபேசி எண், பிபிஓ எண் மற்றும் ஓய்வூதிய கணக்கு எண் விபரங்களை தெரிவித்து கைரேகையை பதிவு செய்தால் சில நிமிடங்களில் டிஜிட்டல் வாழ்வுரிமை சான்று கிடைக்கும்.

இதற்கு சேவை கட்டணமாக ரூபாய் 70/- தபால்காரரிடம் செலுத்த வேண்டும்.

தபால்காரரை அணுக முடியாதவர்கள் அருகில் இருக்கும் தபால் நிலையத்துக்கு சென்று டிஜிட்டல் வாழ்வுரிமை சான்று பெறலாம்.

V. குணசீலன்

அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர்,

நீலகிரி கோட்டம்